பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**26 08 2026** **WEDNESDAY** **6.45 AM**

## மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1.** உள்கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்தும்போது, தரத்தில் எவ்வித சமரசமும் செய்து கொள்ளக்கூடாது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

**2.** நாடாளுமன்ற கூட்டத்தொடரை முடக்குவது மட்டுமே எதிர்க்கட்சிகளின் ஒரே நோக்கம் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

**3.** மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக விரைவில் தண்ணீர் திறக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு ஆனந்த் கூறியுள்ளார்.

**4.** பரந்தூர் விமான நிலையத் திட்டப்பகுதியில் புதிய தொழில் திட்டங்களை தொடங்குவதாக மாநில அரசு அறிவித்திருப்பதற்கு பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

**5.** தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் அடுத்த இரண்டு தினங்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>>

உள்கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்தும்போது நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதுடன், தரத்தில் சமரசம் செய்து கொள்ளக்கூடாது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று 30 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒன்பது மாநிலங்களில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள் குறித்து அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டபோது பிரதமர் இதனை தெரிவித்தார்.

ரயில்வே, சாலைகள் மற்றும் மின்துறை தொடர்பான திட்டங்கள் குறித்து தாம் ஆய்வு மேற்கொண்டதாகவும், விரைவான வளர்ச்சி, மிகச்சிறந்த இணைப்பு மற்றும் பொதுமக்களுக்கான சேவைகளை தாமதமின்றி நிறைவேற்ற வேண்டும் என்று அப்போது பிரதமர் கேட்டுக்கொண்டார்.

இதுபோன்ற போக்குவரத்து மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களை நிறைவேற்றும்போது பொதுவான பயன்பாட்டு வழித்தடங்களை அமைப்பது குறித்து ஆராய வேண்டும் என்றும், தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியக்கூறுகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

திட்டங்களை செயல்படுத்தும்போது விரைவாகவும், தரத்தில் சமரசம் செய்துகொள்ளாமலும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அதிகாரிகளை, பிரதமர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>>

நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்து, கூட்டத்தொடரை முடக்குவது மட்டுமே எதிர்க்கட்சிகளின் ஒரே நோக்கம் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குறை கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் செயல்பாடு குறித்து மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ நாளிதழ் ஒன்றில் தெரிவித்திருப்பதை அவர் தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

நாடாளுமன்றம் என்பது ஜனநாயகத்தின் கோவில் என்றும், அர்த்தமுள்ள விவாதங்கள், கருத்துப்பரிமாற்றங்கள் மற்றும் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளுக்கான இடமே தவிர, அரசியல் ரீதியான நிர்பந்தங்களை வலியுறுத்தும் இடம் அல்ல என்று டாக்டர் எல். முருகன் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>>

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால், அணையிலிருந்து பாசனத்திற்காக விரைவில் தண்ணீர் திறக்கப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு ஆனந்த் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் நேற்று இதனை அறிவித்த அவர், அணைக்கு வரும் நீரின் அளவை பொறுத்து, விரைவில் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு குறித்த அறிவிப்பு வெளியாகும் என்று கூறினார்.

இதற்கிடையே, மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி சுமார் **89** அடியை எட்டியிருப்பதாகவும், ஓரிரு நாளில் **90** அடியாக உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>>

தூத்துக்குடி சில்லாநத்தம் பகுதியில் ஆயிரத்து **294** ஏக்கர் பரப்பளவில் மின் வாகன உற்பத்தி தொழில்பூங்கா அமைக்கப்படும் என்று மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் நேற்று தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

சிப்காட் நிறுவனத்தால் 774 கோடி ரூபாய் மதிப்பிட்டில் இந்த தொழில்பூங்கா அமைக்கப்படும் என்றும், இதன்மூலம் 10 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

புதுக்கோட்டையில் 500 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சிறிய ஜவுளிப்பூங்கா, விழுப்புரம் ஓமந்தூர் பகுதியில் 146 கோடி ரூபாயில் சிப்காட் தொழில்பூங்கா அமைக்கப்படும் என்பது உள்ளிட்ட அறிவிப்புகளையும் செல்வி கீர்த்தனா வெளியிட்டார்.

<<<<<<>>>>>>>

பரந்தூர் விமான நிலையத் திட்டம் கைவிடப்படுவதாக அறிவித்த முதலமைச்சர் திரு விஜயை, அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

பரந்தூர் விமான நிலையத் திட்ட எதிர்ப்புக்குழுவின் தலைவர் திரு சுப்பிரமணியம் தலைமையிலான விவசாயிகள், நேற்று தலைமைச்செயலகத்தில் முதலமைச்சரை சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விமான நிலையத்திற்காக 90 சதவீத நிலங்கள் கையகப்படுத்திவிட்டதாக கூறப்படுவது உண்மை அல்ல என்று கூறினார்.

<<<<<<>>>>>>>

விளைநிலங்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை கைவிடுவதாக அறிவித்த தவெக அரசு தற்போது அதே இடத்தில் புதிய தொழில் திட்டங்களை தொடங்குவதாக அறிவித்திருப்பதற்கு பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கையகப்படுத்தப்பட்ட சுமார் ஆயிரத்து 700 ஏக்கர் நிலங்களில் புதிய தொழில் திட்டங்களை தொடங்கப்போவதாக மாநில அமைச்சர் அறிவித்திருப்பது ஏற்கத்தக்கது அல்ல என்று கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>>

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியை கருத்தில்கொண்டு பரந்தூருக்கு மாற்றாக புதிய விமான நிலையப்பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு. தொல் திருமாவளவன் மாநில அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், முதலமைச்சர் திரு விஜய் சட்டப்பேரவையில் அறிவித்த தன் அடிப்படையில் புதிய விமான நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

மாநிலத்தின் வளர்ச்சிக்கு பசுமை விமான நிலையம் அவசியம் தேவை என்றும் திரு. தொல் திருமாவளவன் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>>

தமிழகத்தில் தவெக அரசு மீதான குதிரை பேர புகார்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வாத் அர்லேகரை, அ ம மு க பொதுச்செயலாளர் திரு டி டி வி தினகரன் சந்தித்து வலியுறுத்தியுள்ளார்.

அமமுக சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மன்னார்குடி தொகுதி உறுப்பினர் திரு காமராஜ், தவெக அரசுக்கு ஆதரவு அளித்ததை சுட்டிக்காட்டி, கடந்த மே மாதம் 8-ஆம் தேதி ஏற்கனவே தாம் புகார் அளித்திருப்பதாக திரு டி டி வி தினகரன் பின்னர் செய்தியாளர்களிடம் கூறினார்.

<<<<<<>>>>>>>

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொப்பரைத் தேங்காய் இணையவழி ஏலம் நடைமுறைப்படுத்தப்பட்ட நான்கு மாதங்களில் விற்பனை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

இதன்மூலம், விவசாயிகள் அதிக அளவில் பயனடைந்திருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — ராஜா - 50 Sec.)***

<<<<<<>>>>>>>

தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் அடுத்த இரண்டு தினங்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

வட கேரளத்தையொட்டியுள்ள கடலோரப்பகுதியில் மேலடுக்கு வளிமண்டலத்தில் காற்றழுத்த சுழற்சியும், தமிழகத்தின் கிழக்கு கடலோரப் பகுதியில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பாதையும் நிலவுவதாக வானிலை ஆய்வு மைய அறிக்கை தெரிவிக்கிறது.

இதன்காரணமாக, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் இன்று, இடி-மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் ஏனைய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று காலை நிலவரப்படி, வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடியாக உள்ளது என்றும், ஆற்றில் பரிசல் இயக்குவதற்கு 11-ஆவது நாளாக தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்..

*(Voice Byte — தருமபுரி தண்டபாணி - 44 Sec. )*

<<<<<<<>>>>>>>

*இருவரிச் செய்திகள்*

**Hormuz** நீரிணைப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டதாகவும், புதிதாக கண்ணிவெடிகள் வைக்கப்பட்டால் உடனடியாக அழிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

-------------------

வரும் **2030-**ஆம் ஆண்டுக்குள் இந்தியா — மொராக்கோ இடையேயான வர்த்தகத்தை இருமடங்காக உயர்த்தவும், முதலீடுகளை அதிகரிக்கவும் இருநாடுகளும் இலக்கு நிர்ணயித்துள்ளன.

-------------------

நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், நான்கு நாள் பயணமாக கனடா சென்றடைந்தார்.

--------------

ரக்ஷாபந்தனை முன்னிட்டு நாடு முழுவதும் மகளிருக்கு ஓராண்டு இலவச செல்போன் ரீசார்ஜ் அளிக்கப்படும் என்று சமூக வலைதளங்களில் பரவிவரும் செய்திகள் தவறானவை என மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

-----------------

பெங்களூருவிலிருந்து, விழுப்புரத்திற்கு கடத்தி வரப்பட்ட நான்கு லட்சம் ரூபாய் மதிப்பிலான **240** கிலோ போதைப்பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்து இரண்டு பேரை கைது செய்துள்ளனர்.

-----------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பள்ளி மாணவர்களின் நலன் மற்றும் பள்ளிகளின் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் ஆட்சியர் திருமதி. சினேகா தலைமையில் நேற்று நடைபெற்றது.

---------------

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் செயல்படும் சிறப்புப் பள்ளிகளில் ஆட்சியர் திரு மதுபாலன் ஆய்வு மேற்கொண்டார்.

----------------

மதுரையில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகளை ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா, நேரில் பார்வையிட்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

**<<<<<<END>>>>>>**